1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசின் மூலமும் எல்.ஐ.சி. மூலம் பெறும் கடன்களின் வாயிலாகவும் இத் திட்டத்தைச் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உதவியும் கோரப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 'டிரிங்கிங் வாட்டர் சப்ளை ஸ்கிம்"-க்காக மத்திய சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதில் எவ்வளவு கோடி ரூபாய்களைத் தமிழக அரசு பெற்றிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசு குடிநீர்த் திட்டத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறது என்பதை அம்மையார் புரிந்துகொள்ள வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

Pamban Road Bridge.

* 185 *Q.*—DR. H.V. HANDE :

THIRU K.T.K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government have any proposal to take up Pamban Road bridge work; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். இப்பணி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் இது அமுலாக்கப்படும். தேசிய நெடுஞ்சாலை எண். (49-ல் (மதுரை-தனுஷ்கோடி சாலை) இப்பாலம் இராமேஸ் வரம் தீவையும் மண்டபத்தையும் இணைக்கும் வகையில் இருக்கும். இத்திட்டத்திற்கான ரூ. 532.87 லட்சம் மதிப்பிட்டுப் பட்டியலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இங்கே போடப்படும் பாலத்தின் காரணமாக மறவர் பகுதிகள் இருக்கும் ரோடுகளை எடுப்பதாகக் குறை சொல்லுகிறார்களே, அதை அரசு கவனித் திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அப்படியொரு,

representation was made by some people in the locality that they will be affected by the alignment of the road. There is no other way and the technical advice is that we have to take it up.